# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2108/31 - 2019 ජනවාරි මස 29 වැනි අඟහරුවාදා - 2019.01.29

*2108/31 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: வ/18/04/2013 .
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2013/D/535.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பிரதேச செயலகப் பிரிவில், நவம்மஹர கிராமத்தில், ராகம்பத்துவ சிறு பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. கம் 4123 மற்றும் 2018.12.31 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 01 மற்றும் 02 எனக் குறிப்பிடப்பட்ட முழு விஸ்தீரணத்தின் 0.5495 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டுகளின் விபரங்கள் :

*01.* **துண்டு இல. *01***

காணியின் பெயர்: கஜுகஹாகும்புர; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: ஜனக அம்பகஹாவத்த, இல. 18/3, சன் சிடி தொடர்மாடி மனை, புனித அந்தோனியார் மாவத்தை, கொழும்பு 03; ஆரம்ப உரிமை கோருபவர்: - ; விஸ்தீரணம்: 0.0610 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. *02***

காணியின் பெயர்: கஜுகஹாகும்புர; விபரம்: ஓடை; உரிமை கோருபவர்: ஜனக அம்பகஹாவத்த, இல. 18/3, சன் சிடி தொடர் மாடி மனை, புனித அந்தோனியார் மாவத்தை, கொழும்பு 03; ஆரம்ப உரிமை கோருபவர்: - ; விஸ்தீரணம்: 0.4885 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத்தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ. டீ. ரீ. சீ. ராஜிகா,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
*2019, சனவரி 26.*

*02 - 474*